

தமிழ்நாடு துணை முதலமைச்சரும் தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கடலூர் மேற்கு மாவட்ட மருத்துவ அணி துணைத் தலைவர் மருத்துவர் திட்டக்குடி செந்தில் எழுதிய "வாழும் பெரியார், அம்பேத்கர், அண்ணா, கலைஞர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்" என்ற நூலை நேற்று (3.1.2025) வெளியிட மாநில மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. பெற்றுக்கொண்டார். மருத்துவ அணி தலைவர் மரு.கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. மருத்துவ அணி துணைத் தலைவர் மரு.கம்பன் மற்றும் பதிப்பாளர் கதிர்.ஆர்.எஸ் ஆகியோர் உடன் உள்ளனர்.

# 'அரசியல், ஆட்சி நிர்வாகம், இலக்கியம், சினிமா அனைத்திலும் தனித்துவமாக இருந்தவர் கலைஞர்'

## முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கில் நாஞ்சில் சம்பத் – வாசகர்கள் கலந்துரையாடல்!




சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் இடம்பெற்றுள்ளது இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகம். அந்த அரங்கில் திராவிட இயக்க ஆளுமைகள் - வாசகர்கள் சந்திப்பு, கலந்துரையாடல் நிகழ்ச்சி நாள்தோறும் நடக்கிறது.

நேற்று கலந்துகொண்ட திராவிட இயக்க சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் அவர்கள் பேசுகையில், `உலக வரலாற்றிலேயே நூறு ஆண்டுகளுக்கு மேலாக எந்த விதமான மாறுதலும் இல்லாமல் கொள்கை உறுதியோடு இருக்கும் இயக்கம் திராவிட இயக்கம்தான்' எனக் குறிப்பிட்டார்.

உலகமே வியக்கிறது

பட்டுக்கோட்டை அழகிரி மேடையில் பேசுகிறார் என்றால், கூட்டம் ஏற்பாடு செய்தவர்கள், ஒரு பழைய துணியை அவர் அருகில் வைப்பார்கள். அவர் நெஞ்சிலிருந்து ரத்தம் கொட்டும் ரத்தத்தைத் துடைத்துக் கொண்டு மீண்டும் பேசத் தொடங்குவார். அப்படி, தனது உடல், ஆவி அத்தனையையும் கொட்டி வளர்ந்த இயக்கம்தான் திராவிட இயக்கம்.

அன்று அவர்களெல்லாம் வகுத்துத் தந்த பாதையில்தான், இன்று நாம் நடந்து செல்கிறோம்.

கலைஞரின் ஆளுமையை உலகமே வியக்கிறது. இந்தியத் தலைவர்களில் நேருவுக்குப் பிறகு கலைஞர் மட்டும்தான் ஆட்சியிலும், இலக்கியத்திலும் ஆளுமையாக விளங்கியவர்.

மிக அவசியமானது

அண்ணாவின் தம்பியாக, அவருக்குப் பின் கழகத்தை 50 ஆண்டுகாலம் தனது தலைமையில் வழிநடத்தினார் என்றால், இந்தச் சாதனையை, இந்திய வரலாற்றில் கலைஞரைத் தவிர, வேறு யாரும் செய்ததில்லை.

இதுபோன்று திராவிட இயக்கத் தலைவர்களுடைய வரலாற்றை அறிந்துகொள்வது மிக அவசியமானது.

வாசியுங்கள், வாசித்ததை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள் . முடிந்தவர்கள் உங்கள் பகுதிகளில் படிப்பகத்தை உருவாக்குங்கள்" என்றும் கேட்டுக் கொண்டார்.





